**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

| O.S. No. 45/2012 | | | |
|---|---|---|---|
| Name: | சுப்பிரமணி | Religion: | இந்து |
| Father's Name: | ராமசாமி | Caste: | |
| Village: | கத்தேரி | Calling: | விவசாயம் |
| Taluk: | சங்ககிரி | Age: | 39 |

Date: 23.10.2019 – PW – 1

வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்றால் எனது பாட்டி எனக்கு உயில் எழுதி வைத்த வகையில் பாத்தியம். எவ்வளவு ஏக்கர் எழுதி வைத்துள்ளார் என்றால் 3 1/2 ஏக்கர் எழுதி வைத்துள்ளார். உயில் மூலம் மாராயி எனக்கு 4 ஏக்கர் 44 செண்ட் எழுதி வைத்துள்ளார் என்றாலும், அதனை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் 10 ஏக்கர் 3 செண்ட் நிலத்தில் 3 ல் ஒரு பாகம் எழுதி வைத்துள்ளார். மாராயி எனக்கு எழுதி வைத்துள்ள உயிலில் 429/1 சி, 429/1 இ, 429/4 ஏ, 429/4 பி, 429/8 ஏ, 429/8 பி, 429/8 டி, 429/8 எம், 429/8 கே, 429/8 பி, 429/8 க்யூ, 429/8 எச், 429/3 ஏ, 429/3 பி, 429/9 ஆகிய சர்வே எண்களை குறிப்பிட்டு அதில் உள்ள நிலங்கள் தனக்கு பாத்தியம் என எனக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். உயிலில் உள்ள சொத்துக்களைத்தான் இதுநாள் வரை அனுபவித்து வருகிறேனா என்றால் மாறி மாறித்தான் அனுபவித்து வருகிறேன். 429 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 ஏக்கர் 87 செண்ட். புஞ்சை ஏக்கர் 4.70.5 ஏர்ஸ் அளவுக்கு கேஸ் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அதன் விஸ்தீரணம் 11 ஏக்கர் 62 செண்ட் என்றால் ஆமாம். அதில் 75 செண்ட் புறம்போக்கு நிலம் என்றால் ஆமாம். புறம்போக்கு நிலத்திற்கும் சேர்த்துதான் கேஸ் போட்டுள்ளேன் என்றால் இல்லை. 12 செண்டில் பட்டா நிலத்தில் ரோடு செல்கிறது என்றால் ஆமாம். பெருமாள் கவுண்டர், செங்கோட கவுண்டர் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. செங்கோடகவுண்டரின் வாரிசு சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பெருமாள் கவுண்டருக்கும், செங்கோட கவுண்டருக்கும் தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியம். அவ்வாறு பூர்வீகமாக பாத்தியம் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எதன் அடிப்படையில் அவர்களுக்கு 6 ல் 2 பங்கு பாத்தியம் என சொல்லியுள்ளேன் என்றால் காலம் காலமாக முறை வைத்துதான் தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். அதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன். பெருமாள்கவுண்டரும், செங்கோடகவுண்டரும் சகோதரர்கள் என

சொல்லியுள்ளது தவறு என்றாலும், பெருமாள் கவுண்டரும், பழனிகவுண்டரும்தான் சகோதரர்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி பெருமாள் கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டரின் மனைவி பெயர் என்ன என்றால் பழனியக்கா. பழனிக்கவுண்டருக்கு இரண்டு ஆண் மக்கள் பழனிவேல் கவுண்டர் மற்றும் பழனியப்பன் என்றால் ஆமாம். பழனிவேல்கவுண்டர் இறந்து விட்டார் என்றாலும், அவருடைய மகன்தான் 7ஆம் பிரதிவாதி பழனியப்பன் என்றாலும் சரிதான். பழனியப்பன் இறந்து விட்டார் என்றாலும், அவருக்கு 2ஆம் வாதியும், 8ஆம் பிரதிவாதியும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் வாரிசுகள் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி ராமசாமி தாவா சொத்தில் ஒரு பகுதியை முத்துசாமி என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டார் என்றால் ஆமாம். அது ச.எண்.429/10எப்-ல் உள்ளது என்றால் ஆமாம். அதன் விஸ்தீரணம் 55 1/2 செண்ட் என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி கிரயம் கொடுத்த சொத்தானது எனது பாட்டி எழுதிக் கொடுத்த உயில் சாசனத்தில் வரவில்லை என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி அவருடைய அனுபவத்தில் உள்ள சொத்தைத்தான் 6ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றாலும், அதில்தான் 6ஆம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றாலும், எங்களுடைய சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக 2ஆம் பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் நானும் கொடுத்துள்ளேன். அவரும் கொடுத்துள்ளார். தாவா சொத்தில் பொதுவில் சரிபாதியான 5 ஏக்கர் 43 1/2 செண்ட்-ஐ 1ஆம் பிரதிவாதியின் தாத்தா செங்கோடகவுண்டர், 1ஆம் பிரதிவாதியின் தாயார் பழனியக்கா மற்றும் பழனிக்கவுண்டர் சேர்ந்து கடந்த 16.4.1941 தேதியில் செல்லப்பக்கவுண்டரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்தக் கிரயப் பத்திரத்தின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதியின் தாயார் பழனியக்கா 17.6.1944 ல் பழனிகவுண்டர் வகையறாவிடம் இருந்து 10 ஏக்கர் 87 செண்டில் பொதுவில் சரிபாதியில் 3ல் 1 பாகத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தின் மூலம் 1 முதல் 5 பிரதிவாதிகள் குடும்பத்திற்கு 1 ஏக்கர் 81 செண்ட் பாத்தியம் என்றால் இல்லை. 1ஆம் பிரதிவாதியின் அப்பர் பெருமாள்கவுண்டர் மற்றும் அவரது சகோதரர் பழனிக்கவுண்டர் 17.6.1944 தேதியில் பழனிக்கவுண்டர் வகையறாவிடம் இருந்து 10 ஏக்கர் 87 செண்டில் பொதுவில் சரிபாதியில் 3ல் 1 பாகத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி தெரியவில்லை. மேற்படி ஆவணத்தின் மூலம் 1 முதல் 5 பிரதிவாதிகள் குடும்பத்திற்கு 90 செண்ட் பாத்தியம் என்றால் இல்லை. மூன்று ஆவணங்கள் மூலம் 1 முதல் 5 பிரதிவாதிகள் குடும்பத்திற்கு மொத்தம் 5 ஏக்கர் 43 செண்ட் பாத்தியம் என்றால் இல்லை. மேற்படி 5 ஏக்கர் 43 செண்டை 1 முதல் 5

பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கும் பட்சத்தில் பாகப்பிரிவினை செய்வதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும் அதற்கு அவர்கள் நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளார்கள் என்றால் அதற்கு நான் ஒத்துக் கொள்ளவில்லை. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களின் விஸ்தீரணம் தவறு என்றாலும், உறவுமுறையை குறிப்பதற்கான கொடிவழி ஜாதகமும் தவறானது என்றாலும் சரியல்ல. தற்போது தாவா சொத்துக்கள் கிட்டத்தட்ட 150 க்கு மேல் உட்பிரிவாகியுள்ளது என்றால் ஆமாம். அதைக் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். பிராதில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள வீடுகள் மற்றும் கிணறு எந்த உட்பிரிவில் உள்ளது என்பதை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். சொத்துக்களில் எங்களுக்கு பாகம் கிடைக்கத்தக்கது என தீர்ப்பளிக்கப்பட்டாலும் உட்பிரிவு குறிப்பிடவில்லை என்பதால் பிற்காலத்தில் தீர்ப்பாணையை நிறைவேற்ற இயலாது என்றால் சரியல்ல. புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து வழக்குப் போட்டுள்ளதாலும் தீர்ப்பாணையை நிறைவேற்ற இயலாது என்றால் சரியல்ல. சொத்தில் என்னுடைய சுவாதீனத்தில் இடையூறு செய்ததாக சொல்லியுள்ளேன். எந்த தேதியில் செய்தார்கள் என்றால் தற்போது தேதி ஞாபகம் இல்லை. சொத்தின் மதிப்பு தற்போது எவ்வளவு இருக்கும் என்றால் தெரியவில்லை. ஏக்கர் 15 லட்சத்திற்கு போகுமா என்றால் தெரியவில்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் மூன்று ஆவணங்கள் மூலம் 5 ஏக்கர் 43 1/2 செண்ட் பாத்தியம் என்றாலும், எந்த வகையான ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் அவர்களுக்கு 6 ல் 2 பங்காக 3 ஏக்கர் 63 செண்ட் மட்டுமே பாத்தியம் என பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 5 ஏக்கர் 43 1/2 செண்ட் ஒதுக்கும் பட்சத்தில் பாகம் செய்து கொள்வதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக பலமுறை சமாதானம் பேசியுள்ளோம் என்றால் 7 ஊர் நபர்களை வைத்து பேசியுள்ளோம். பைசல் பேசியபோது நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் பங்குபடி ஒப்புக் கொண்டோம். பத்திரப்படி ஒப்புக் கொள்ளவில்லை. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Sd/- Subramani

**Sd/- M. Mekala Mythili,**
**Subordinate Judge,**
**Sankari.**